# பாடம் 1 : தமிழ்த்தேன் இன்பத்தமிழ்

“தமிழுக்கும் அமுதென்றுபேர் - அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்!
தமிழுக்கு மணமென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்தஊர்!
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்லபுகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான் - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர்தந்ததேன்!
தமிழ் எங்கள் அறிவுக்குத் தோள் - இன்பத்
தமிழ் எங்கள் கவிதைக்கு வயிரத்தின் வாள்!”

என்ற பாடலை இயற்றியவர் - **“பாவேந்தர் பாரதிதாசன்”**

### சொல்லும் பொருளும் :

- நிருமித்த - உருவாக்கிய
- விளைவு - விளைச்சல்
- சமூகம் - மக்கள் குழு
- அசதி - சோர்வு

**பாரதிதாசன் பற்றியக் குறிப்புகள் :**

- பாரதிதாசனின் இயற்பெயர் - **சுப்புரத்தினம்**
- பிறந்த ஆண்டு - **29.4.1891**
- பெற்றோர் : **கனகசபை - லட்சுமி**
- பிறந்த ஊர் - **புதுச்சேரி**
- **16-**வயதில் புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியர் பணியில் சேர்ந்தார்.
- **1938-**ல் **இந்தி எதிர்ப்பு போராடத்தில்** கலந்துகொண்டு சிறை சென்றார்.
- புதுவையில் பாரதியின் கட்டளைக்கிணங்கப் பாடியது
- "எங்கெங்கு காணினும் சக்தியடா - தம்பி
- ஏழுகடல் அவள் வண்ணமடா" என்ற பாடல். இதனைப் பாரதி " **ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக சுப்பு ரத்தினம் எழுதியது** " எனக் குறிப்பிட்டுச் **சுதேசமித்திரன்** இதழுக்கு அனுப்பினார்.
- பாரதிதாசன் **"புரட்சிக்கவி "**என்றும் **"பாவேந்தர்"** என்றும் போற்றப்படுகிறார்.

**பாரதிதாசன் வலியுறுத்திய கருத்துக்கள் :**

- பெண்கல்வி
- கைம்பெண் மறுமணம்
- பொதுவுடமை
- பகுத்தறிவு

**பாரதிதாசன் இயற்றிய நூல்கள் :**

- பாரதிதாசன் கவிதை தொகுப்பு 1,2,3
- இசை அமுது 1,2
- பாண்டியன் பரிசு
- எதிர்பாராத முத்தம்
- சேர தாண்டவம்
- அழகின் சிரிப்பு

- ❖ குடும்ப விளக்கு
- ❖ இருண்ட வீடு
- ❖ குறிஞ்சித்திட்டு
- ❖ கண்ணகி
- ❖ புரட்சிக் காப்பியம்
- ❖ மணிமேகலை வெண்பா
- ❖ காதல் நினைவுகள்
- ❖ கழைக்கூத்தியின் காதல்
- ❖ தமிழச்சியின் கத்தி
- ❖ அமைதி
- ❖ இளைஞர் இலக்கியம்
- ❖ சௌமியன்
- ❖ நல்ல தீர்ப்பு
- ❖ தமிழ் இயக்கம்
- ❖ இரண்யன் அல்லது இணையற்ற வீரன்
- ❖ காதலா கடமையா?
- ❖ சஞ்சீவி பார்வதத்தின் சாரல்
- ❖ பொதுவுடமையை வலியுறுத்துவது - **சஞ்சீவி பார்வதத்தின் சாரல்**
- ❖ இயற்கையை வருணிப்பது - **அழகின் சிரிப்பு**
- ❖ கற்ற பெண்களின் சிறப்பைக் கூறுவது - **குடும்ப விளக்கு**
- ❖ கல்லாத பெண்களின் இழிவைக் கூறுவது - **இருண்ட வீடு**
- ❖ பில்கணியத்தின் தழுவல் - **புரட்சிக்காப்பியம்**
- ❖ பாரதிதாசன் உரை எழுதிய நூல் - **திருக்குறள்.**
- ❖ பாரதிதாசன் நடத்திய இதழ் - **குயில்**
- ❖ பாரதிதாசன் மறைந்த ஆண்டு - **1964**

- ❖ "அறிவுக் கோயிலைக் கட்டி அதில் நம்மைக் குடியேற்ற விரும்புகின்ற பேரறிஞன்" என்று பாரதிதாசனைப் புகழ்ந்தவர் - **புதுமைப்பித்தன்**

"தமிழே உயிரே வணக்கம்

தய்பிள்ளை உறவம்மா, உனக்கும் எனக்கும்

அமிழ்தே நீ இல்லை என்றால்

அத்தனையும் வாழ்வில் கசக்கும் புளிக்கும்

தமிழே உன்னை நினைக்கும்

தமிழன் என் நெஞ்சம் இனிக்கும் இனிக்கும்"

என்ற பாடலை பாடியவர் - **கவிஞர் காசி ஆனந்தன்**

- ❖ நிலவு + என்று என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் - **நிலவென்று**
- ❖ தமிழ் + எங்கள் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் - **தமிழெங்கள்**
- ❖ அமுதென்று என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது - **அமுது + என்று**
- ❖ பாரதிதாசன் தமிழுக்குச் சூட்டியுள்ள பெயர்கள் - **நிலவு, மணம்**

# தமிழ்க்கும்மி

“கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி, இளங்
கோதையரே கும்மி கொட்டுங்கடி - நிலம்
எட்டுத்திசையிலும் செந்தமிழின் புகழ்
எட்டிடவே கும்மி கொட்டுங்கடி”
என்ற தமிழைப் போற்றும் கும்மி பாடலை இயற்றியவர் - **பெருஞ்சித்தரனார்.**

“ஊழி பலநூறு கண்டதுவாம், அறிவு
ஊற்றெனும் நூல்பல கொண்டதுவாம் - பெரும்
ஆழிப்பெருக்கிற்கும் கலத்திற்கும் முற்றும்
அழியாமலே நிலை நின்றதுவாம்!
பொய் அக்றும்: உள்ளப் பூட்டறுக்கும் - அன்பு
பூண்டவரின் இன்பப் பாட்டிருக்கும் - உயிர்
மெய்புகட்டும்; அறமேன்மை கிட்டும்; இந்த
மேதினி வாழ்வழி காட்டிருக்கும்!”
என்று தமிழ் மொழியை பாவலரேறு **பெருஞ்சித்தரனார்** போற்றுகிறார்.

## சொல்லும் பொருளும்

- ஆழி பெருக்கு - கடல் கோள்
- மேதினி - உலகம்
- ஊழி - நீண்டதொருகாலப் பகுதி
- அள்ளப்பூட்டு - அறியவிரும்பாமை

## பெருஞ்சித்தரனார் பற்றியக் குறிப்புகள் :

- இவரது இயற்பெயர் - **இராசமாணிக்கம்**
- பிறந்த ஆண்டு - **10.03.1933**
- பிறந்த ஊர் - **சேலம் மாவட்டத்திலுள்ள சமுத்திரம்**
- மாணவர் பருவத்தில் " **குழந்தை** " என்னும் பெயரில் கையெழுத்து ஏடு நடத்தினார்.
- **"அருணமணி"** என்ற பெயரில் **"மலர்க்காடு"** என்ற கையெழுத்து ஏடு நடத்தினார்.
- **1950** ல் சேலம் மாநகராட்சிக் கல்லூரியில் படித்த போது பாவாணரிடம் தமிழ்க் கற்றார்.
- **1959** ல் **தென்மொழி** என்ற இதழைத் தொடங்கினார்.
- இன்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பெரும் தூண்டுதலாக இருந்ததால் **வேலூர் சிறையில்** அடைக்கப்பட்டார்.
- வேலூர் சிறையில் இருந்த போது " **ஐயை"** என்ற காவியத்தின் முதல் பகுதியை எழுதினார்.
- சிறையிலிருந்து வந்து " **தமிழ்ச்சிட்டு** " என்ற இதழைத் தொடங்கினார்
- **1972** ல் **தென்மொழிக் கொள்கைச் செயற்பாட்டு மாநாடு** நடத்தினார்
- பாவாணரின் " **அகரமுதலி"**தொகுப்பதற்குப் பொருளுதவி செய்யும் திட்டத்தைத் தொடங்கினார்
- நெருக்கடிநிலை நடைமுறைக்கு வந்த போது சிறைப்பட்டார்.**அப்போது " ஐயை " நூலின் இரண்டாம் பகுதியை எழுதினார்.**
- பல்வேறு காலக்கட்டங்களில் தாம் எழுதிய உணர்வுப்பாடல்களை **1979** ல் **"கனிச்சாறு "** என்ற பெயரில் மூன்றுத் தொகுதிகளாக தொகுத்து வெளியிட்டார்.
- **1981** ல் உலகத்தமிழ் **தமிழின முன்னேற்றக் கழகம்** என்ற அமைப்பைத் தொடங்கினார்.
- **1982 ல் " தமிழ்நிலம் "** என்ற ஏட்டைத் தொடங்கினார்.
- இவர் **"பாவலரேறு"** என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்படுகிறார்

**பெருஞ்சித்தரனார் இயற்றிய நூல்கள் :**

- அறுபருவத்திருக்கூத்து
- இட்ட சாபம் முட்டியது
- உலகியல் நூறு
- ஐயை
- கழுதை அழுத கதை
- கனிச்சாறு
- கொய்யாக்கனி
- தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்
- திருக்குறள் மெய்ப்பொருள் உரை
- நூறாசிரியம்
- பாவியக்கொத்து
- மகபுகுவஞ்சி
- வாழ்வியல் முப்பது உள்ளிட்ட 35 நூல்களை எழுதியுள்ளார்.

**இவர் நடத்திய இதழ்கள் :**

- தென்மொழி
- தமிழ்ச்சிட்டு
- தமிழ்நிலம்

“**கனிச்சாறு** ”என்னும் நூல் **எட்டுத்** தொகுதிகளாக வெளிவந்துள்ளது.

"வான் தோன்றி, வளி தோன்றி, நெருப்புத் தோன்றி
மண் தோன்றி, மழைத் தோன்றி, மலைகள் தோன்றி
ஊன் தோன்றி, உயிர் தோன்றி, உணர்வு தோன்றி
ஒளி தோன்றி, ஒலி தோன்றி, வாழ்ந்த அந்நாள்
தேன் தோன்றியது போல மக்கள் நாவில்
செந்தமிழே! நீ தோன்றி வளர்ந்தாய்! வாழி!"

என்று தமிழ் மொழியை வாழ்த்திப் பாடியவர் - **வாணிதாசன்**

- செந்தமிழ் என்னும் சொல்லைப் பிரித்தால் " **செம்மை + தமிழ்** " எனப் பிரியும்.
- பொய்யகற்றும் என்னும் சொல்லைப் பிரித்தால் **பொய் + அகற்றும்** எனப் பிரியும்
- பாட்டு + இருக்கும் என்னும் சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது - **பாட்டிருக்கும்**
- எட்டு + திசை என்ற சொல்லை சேர்த்து எழுதக் கிடைப்பது - **எட்டுத்திசை**

## வளர்தமிழ்

- உலகில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகள் உள்ளன
- தமிழ் இலக்கியங்கள் இனிமையானவை. ஓசைஇனிமை, சொல் இனிமை, பொருள் இனிமை கொண்டவை.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்"

என்று தமிழ் மொழியின் இனிமையை வியந்து பாடியவர் - **பாரதியார்.**

"என்று பிறந்தவள் என்று உணராத
இயல்பினளாம் எங்கள் தாய்"

என்று தமிழ்த்தாயின் தொன்மையைப் **பாரதியார்** கூறுகிறார்.

- தமிழில் நமக்கு கிடைத்துள்ள மிகப் பழமையான நூல் - **தொல்காப்பியம்**
- தமிழ் எழுத்தக்கள் பெரும்பாலும் **வலஞ்சுழி** எழுத்துக்களாகவே உள்ளன.

  (எ.கா) வலஞ்சுழி எழுத்துக்கள் - **அ, எ, ஔ, ண, ஞ**

  இடஞ்சுழி எழுத்துக்கள் - **ட,ய,ழ**

- **"தமிழ்"** என்னும் சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட இலக்கியம்

  - **தொல்காப்பியம்") தமிழென் கிழவியும் அதனோ ரற்றே")**

- **"தமிழ்நாடு"** என்னும் சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட இலக்கியம் - **சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம்**

  "இமிழ் கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய

  இதுநீ கருதினைஆயின்"

- **"தமிழன்"** என்னும் சொல் முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட இலக்கியம்- **அப்பர் தேவாரம் ........) தமிழன் கண்டாய்(**
- சீர்மை என்பது **ஒழுங்கு** முறையைக் குறிக்கும் சொல் ஆகும்
- அஃறிணை, = அல் + திணை (உயர்வு இல்லாத திணை)
- பாகற்காய் = பாகு + அல் + காய் (இனிப்பு அல்லாத காய் பாகற்காய்)
- 'மா' - எனனும் ஒரு சொல் மரம், விலங்கு, பெரிய, திருமகள், அழகு, அறிவு, அளவு, அழைத்தல், துகள், மேன்மை, வயல், வண்டு போன்ற பல பொருள்களைத் தருகிறது.
- தமிழுக்கு **முத்தமி**ழ் என்னும் சிறப்புப் பெயரும் உண்டு.
- இயல்தமிழ் **எண்னத்தை வெளிப்படுத்தும்**
- இசைத்தமிழ் **உள்ளத்தை மகிழ்விக்கும்**
- நாடகத்தமிழ் **உணர்வில் கலந்து வாழ்வை நல்வழிப்படுத்தும்**

## தாவர இலைப் பெயர்கள் :

- ஆல், அரசு, மா, பலா, வாழை - **இலை**
- அகத்தி, பசலை, முருங்கை - **கீரை**
- அருகு , கோரை - **புல்**
- நெல், வரகு - **தாள்**
- மல்லி - **தழை**
- சப்பாத்திக்கள்ளி, தாழை - **மடல்**
- கரும்பு, நாணல் - **தோகை**
- பனை, தென்னை - **ஓலை**
- கமுகு - **கூந்தல்**

## தமிழ் எண்கள்:

- 1 - க
- 2 - உ
- 3 - ௩
- 4 - ச
- 5 - ரு
- 6 - சா
- 7 - எ
- 8 - அ
- 9 - ௯
- 10 - க0